[1998 மே 5

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது செயலாக்கத்தில் உள்ளது.

திரு. இ.ஏ.பி. சிவாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே திருத்தணி குடிநீர்த் திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 4 கோடியே 10 இலட்சம் ரூபாயை ஒதுக்கி, திருத்தணி நகருக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதற்காக என் நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், நிதியொதுக்கப்பட்டு ஓராண்டு நிறைவுற்ற நிலையில்கூட, இன்னும் தொடக்கப் பணிகள் துவங்கப்படாமலேயே இருக்கின்றன. அதை விரைவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 கோடியே 10 இலட்சம் ரூபாயில் அந்தத் திட்டம் அனுமதிக்கப்பட்டு வருடச் செலவுக்காக 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், அதுபோலவே, அதற்குள் அடங்கிய பல திட்டங்களுக்கும் அரசு நிதி வழங்கியுள்ளது. நீராதாரத்தைக் கண்டுபிடிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. இரண்டு மூன்று இடங்களில் பார்த்து, இப்போது 4 நீர் உறிஞ்சிக் கிணறுகள் குசஸ்தலை ஆற்றில் அமைப்பதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளது. விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்த ஆண்டில் அவைகளை முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 426, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

426—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சியை இரண்டாகப் பிரித்தல்

***8682—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியத்திலுள்ள நெடி, மோழியனூர் கிராமத்தில் நெடி என்கிற கிராமப் பகுதிக்கும், மோழியனூர் என்கிற

1998 மே 5]

கிராமப் பகுதிக்கும் சுமார் 2 கி.மீ. இடைவெளி இருப்பதால் நெடி ஊராட்சி என்றும், மோழியனூர் ஊராட்சி என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் தொகுதி, மைலம் ஒன்றியத்தில் உள்ள நெடி மோழியனூர் கிராமத்தில் நெடி என்கிற கிராமப் பகுதிக்கும், மோழியனூர் என்கிற கிராமப் பகுதிக்கும் சுமார் 2 கி.மீ. இடைவெளி இருக்கிறது. அதனை நெடி ஊராட்சி என்றும், மோழியனூர் ஊராட்சி என்றும் இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதுவும் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ரா. சேதுநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதியில் மைலம் ஒன்றியத்தில் நெடி, மோழியனூர் என்ற இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. மோழியனூர் பஞ்சாயத்து என்று அழைக்கப்படுகிறது. இரண்டிற்கும் இடைவெளி தூரம் 2 கி.மீட்டர் இருப்பதால் மக்கள் வாக்குகளை அளிப்பதற்குச் செல்கிறபோது சிரமமாக இருக்கிறது. தலைவரைப் பார்ப்பதற்கும் சிரமப்படுகிறார்கள். நெடி கிராமத்தில் 5,800 பேர் இருக்கிறார்கள். மோழியனூர் கிராமத்தில் 12,200 பேர் இருக்கிறார்கள். எனவே, மக்கள் வசதிக்காக அதைத் தனியாகப் பிரித்து, தனித்தனி ஊராட்சியாக அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புவதோடு, என் தொகுதியிலுள்ள சித்தணி, எழாய், சின்னநெற்குணம், எடப்பாளையம், அகூர், மண்ணம்பூண்டி, நடுவநந்தல், புதூர், பெரமண்டூர், காட்ராம்பாக்கம் ஆகிய பஞ்சாயத்துக்களையும் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் உள்ள பொருளை மட்டும் இங்கே நான் குறிப்பிடுகிறேன். அதாவது ஏற்கெனவே இருந்த நிலையை மாற்றி, புதிய நிர்வாகம் 25-10-1996 அன்றுதான் முறைப்படி பொறுப்பேற்றுள்ளது. இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருக்கிறார்கள். இவர்களை உள்ளடக்கிய ஒரே ஒரு தலைவர் இப்போது இருக்கிறார். பல உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, முறைப்படி தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்புவார்களேயானால், அந்தத் தீர்மானம் கிடைத்தபிறகு, அது ஊராட்சிச் சட்டத்திற்கு உட்பட்டு முறைப்படி இருக்குமானால், அதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.